**செ. கு. எண்: 024** **நாள்: 27.02.2020**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 27.2.2020**

---

தினமலர் நாளிதழின் பங்குதாரரான தெய்வத்திரு. ராகவன் என்பவரின் மனைவியும், அப்பத்திரிகையின் ஆசிரியர் திரு.ராமசுப்பு மற்றும் வெளியீட்டாளர் திரு. கோபால்ஜி ஆகியோரின் தாயாருமான திருமதி சுப்புலட்சுமி அவர்கள், உடல்நலக் குறைவால் இன்று (27.2.2020) திருச்சிராப்பள்ளியில் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன்.

திருமதி சுப்புலட்சுமி அவர்கள், தனது கணவர் திரு. ராகவன் அவர்களின் வளர்ச்சிக்கு, உற்ற துணையாகவும், பக்கபலமாகவும், திரு. ராமசுப்பு மற்றும் திரு.கோபால்ஜி ஆகியோருக்கு நல்லதொரு தாயாகவும் இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

திருமதி சுப்புலட்சுமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தினமலர் குழுமத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**